[1986 நவம்பர் 19

ஆலங்குடி தொகுதி கீரமங்கலத்தை தனி வட்டமாக அமைத்தல்.

72—(*வினா எண் 8121 திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கீரமங்கலத்தை தனி வட்டமாக அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியாகிய ஆலங்குடி தொகுதியில் மொத்தம் 103 ஊராட்சிகள் உள்ளடங்கிய தொகுதியாக இருக்கின்ற காரணத்தாலும் இதில் கரம்பக்குடியில் 40 ஊராட்சிகளும், திருவரங்குளத்தில் 50 ஊராட்சிகளும், அறந்தாங்கி ஒன்றியத்தைச் சேர்ந்த 13 ஊராட்சிகளும் ஆக மொத்தம் 103 ஊராட்சிகள் இருக்கின்ற காரணத்தாலும் மொத்த வாக்காளர்கள் 1 லட்சத்து 20 ஆயிரத்திற்கு மேல் இருக்கிற காரணத்தாலும், கீரமங்கலம் பேரூராட்சியாக இருப்பதாலும், அது ஒரு ரெவின்யூ பிர்க்காவாக இருக்கின்ற காரணத்தாலும் கீரமங்கலத்தைச் சுற்றியுள்ள பைங்கால், மேற்பனக்காடு, பெரியலூர், வேம்பங்குடி, ஆவணத்தான் கோட்டை, திருநாளூர் மறமடக்கி இப்படி பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களை ஒன்றாக இணைத்து அதை ஒரு தனி வட்டமாக ஆக்கி பொது மக்களின் நலன் கருதியும், அரசின் சிரமங்கள் கருதியும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வருகின்ற கால கட்டத்திலாவது— தருவதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை கோட்டத்தைச் சேர்ந்த ஆலங்குடி வட்டத்தில் உள்ள கீரமங்கலத்தை ஒரு தனிவட்டமாக ஆக்கலாம் என்று 1979 ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு செயற் குறிப்பை அனுப்பினார்கள். அந்த செயற்குறிப்பைப் பொறுத்து ஆலங்குடி மற்றும் அறந்தாங்கியை திருத்தி அமைக்கவேண்டும் என்ற கோரிக்கையையும் சொன்னார்கள். ஆனால் இந்த பார்த்துவிட்டு வருவாய் மற்றும் நிர்வாக இணை ஆணையாளர் அந்த செயற் குறிப்பை ஏற்கவேண்டிய அவசியம் இல்லை என்று அரசுக்குத் தெரிவித்துவிட்டார்கள். ஆகவே அது நின்றுவிட்டது. இப்போது புதிய வட்டமாக அமைப்பதற்கு உரிய செயற்குறிப்பு எதுவும் ஆலங்குடியைப் பொறுத்தவரையில் அமையவில்லை. ஆக அங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் கூறியது போன்ற குறிப்புகளை எடுத்து அனுப்பி அதை வருவாய் நிர்வாகத் துறை ஆராய்ந்து அரசுக்கு அனுப்புகிற சூழ்நிலையில் அரசு அதை ஆராயும்.

1986 நவம்பர் 19]

திரு த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தொகுதி கீரமங்கலத்தை தனி வட்டமாக அமைக்கும் செயற்குறிப்பு இல்லை என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த போதிலிருந்தே இந்தக் கோரிக்கையை நீண்ட நெடுங் காலமாக வலியுறுத்தி வந்திருக்கிறேன். அதோடு ஆலங்குடிக்கு எந்தப் பகுதியில் இருந்து வரவேண்டும் என்றாலும் 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு மக்கள் அங்கே தாலுக்கா அலுவலத்திற்கு வந்து காரியங்களைச் செய்கின்ற ஒரு நிலை ஏற்படுகிறது. ஆகவே, அரசு மறுபரிசீலனை செய்து இதைத் தனி வட்டமாக அறிவிக்க நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கைகள் அந்தப் பகுதியில் இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினருக்கும் இருக்கலாம். நான் சொன்னது செயற்குறிப்பு இல்லை, நிலுவையில் இல்லை என்று சொன்னேன். அந்த செயற்குறிப்பு உருப்படியாக இருக்க வேண்டும் என்றால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற புள்ளிவிவரங்களை மற்றவைகளை வைத்து வருவாய் மற்றும் நிர்வாக துறைக்கு அனுப்புவார்களானால் அதற்குப் பிறகு அவர்கள் பரிந்துரையின் பேரில் அரசு ஆராயும் என்று குறிப்பிட்டேன்.

தஞ்சை மாவட்ட நிலங்களுக்கு நிலவரி ரத்து.

73—(*வினா எண் 8488) திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1985-86-ல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு நிலவரி ரத்து செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) ஆம்.

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் 1395 ஆம் விளைச்சல் ஆண்டில் (1985-86) ஏற்பட்ட வெள்ளம் மற்றும் வறட்சியால் பாதிக்கப் பட்ட பயிர் நிலங்களில் விளைச்சல் 37 பைசா (50 விழுக் காடு-வுக்கும் குறைவாக உள்ள நிலங்களை வருவாய் அலுவலர் களால் நேரில் சென்று பார்வையிட்டபின்பு அந்நிலங்களுக்கு நிலவரி மற்றும் உள்ளூர் வரி வசூலை தள்ளுபடி செய்யுமாறு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 விழுக்காடு என்பது இரண்டு போகங்கள் நடுகின்ற நிலங்களில் ஒரு போகம் அறுவடை ஆகிவிட்டால், ஒரு போகம்